சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

# கணக்கீடு – 33 தரம் - 12

## Covid – 19 இடர் வீடுமுறைகால பயிற்சி

## தேர்ச்சி – 4.10 : கட்டுப்பாட்டுக் கணக்குகள்

வாரம் - **August 16 – 20** தயாரிப்பு : **சஜித்.sp**

இரத்தினபுரி தமிழ் தேசிய கல்லூரி BBA(Financial Spl), University of Colombo

**1.** சர்வான் நிறுவனத்தின் 31.03.2021 இல் உள்ளப்படியான கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு ரூபா 80 000 மீதியினை காட்டியது. இத்தினத்தில் உள்ளப்படியான கடன்பட்டோர் பட்டியல் மீதி வேறொரு மீதியினை காட்டியது. இவ்விரு மீதிகளும் வேறுபடுவதற்குரிய காரணங்கள் பின்வருமாறு:

1. விற்பனை நாட்குறிப்பேடானது ரூபா 20 000 எனும் தொகையினால் கூட்டிக்கூட்டப்பட்டது.
2. சிவம் எனும் கடன்பட்டோருக்கான கொடுத்தக் கழிவு ரூபா 3 000 அவரின் தனிப்பட்ட கணக்கில் மாத்திரம் பதியப்பட்டிருக்கவில்லை.
3. பிரதீப்பிடமிருந்தான உட்திரும்பல் ரூபா 5 000 ஏட்டில் பதியப்பட்டிருக்கவில்லை.
4. கடன்பட்டோர்களான ரகீம் வரவு மீதி ரூபா 4 000, சினூ செலவு மீதி ரூபா 2 000 போன்றன கடன்பட்டோர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.
5. ரூபா 10 000 தரவேண்டிய வருமதியாளர் ஒருவரின் மீதி அறவிடமுடியாக்கடனாக பதிவழிக்கப்பட்டது. இது தொடர்பாக கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் எப்பதிவும் இடம்பெற்றிருக்கவில்லை.

**வேண்டப்படுவது:**

1) திருத்திய கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு
2) திருத்திய கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு மீதியிலிருந்து திருத்த முன் கடன்பட்டோர் பட்டியல் மீதியினை இனங்காண்பதற்கான கணக்கினக்க கூற்று

**2.** ரகீம் நிறுவனத்தின் 31.05.2021 இல் உள்ளப்படியான கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு ரூபா 120 000 மீதியினை காட்டியது. இத்தினத்தில் உள்ளப்படியான கடன்பட்டோர் பேரேட்டு மீதிகளின் மொத்தம் பிறிதொரு மீதியினை காட்டியது. இவ்விரு மீதிகளும் வேறுபடுவதற்குரிய காரணங்கள் பின்வருமாறு:

1. அறவிடமுடியாக் கடனாக பதிவழிக்கப்பட்ட ரூபா 15 000 கடன்பட்டோர் மீதியொன்று கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு மாற்றப்படவில்லை.
2. விற்பனைப் பட்டியலொன்றின் ரூபா 21 000 விற்பனை நாளேட்டில் ரூபா 12 000 எனப் பதியப்பட்டியிருந்தது.
3. கடன்பட்டவரொருவர் நேரடியாக வங்கிக்குச் செலுத்திய ரூபா 31 000 கடன்பட்டோர் பேரேடு மற்றும் கட்டுப்பாட்டுக் கணக்கு ஆகிய இரண்டும் பதியப்பட்டியிக்கவில்லை.
4. கடன்பட்டோர்களான சுனில் வரவு மீதி ரூபா 7 000, சிமர் செலவு மீதி ரூபா 3 000 போன்றன கடன்பட்டோர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.
5. காசுப்பெறுவனவு நாட்குறிப்பேட்டின் கழிவு நிரலின் கூட்டுமொத்தம் ரூபா 12 000 பொதுப்பேரேட்டுக்கு ரூபா 21 000 என மாற்றப்பட்டது.

**வேண்டப்படுவது:**

1) சீராக்கிய கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு
2) சீராக்கிய கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு மீதியிலிருந்து சீராக்க முன் கடன்பட்டோர் பட்டியல் மீதியினை இனங்காண்பதற்கான கணக்கினக்க கூற்று